©
GOVERNMENT OF TAMIL NADU
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 2.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 52] CHENNAI, WEDNESDAY, DECEMBER 23, 2020
Margazhi 8, Saarvari, Thiruvalluvar Aandu–2051

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

| | Pages. |
|---|---|
| HIGHER EDUCATION DEPARTMENT | |
| Annamalai University Act.—Nomination of one member to the Syndicate of Annamalai University Chidambaram for certain period | 752 |
| HOME DEPARTMENT | |
| Protection of Human Rights Act.—Appointment of Special Public Prosecutor (Human Rights) to the Courts of Sessions as Human Rights Courts in Dharmapuri District on tenure basis for certain period .. | 752 |
| LABOUR AND EMPLOYMENT DEPARTMENT | |
| Employees State Insurance Act.—Renewal of Exemption granted to the Thanjavur West Sarvodaya Sangh, Thanjavur for the further period of one year form 11-10-2020 to 10-10-2021 .. .. .. | 752-753 |
| Industrial Tribunal for Adjudication .. .. | 753 |
| Labour Courts for Adjudication .. .. | 753-756 |

## NOTIFICATIONS BY GOVERNMENT

HIGHER EDUCATION DEPARTMENT

**Nomination of one member to the Syndicate of Annamalai University Chidambaram for certain period under the Annamalai University Act.**

*[G.O. (D). No. 220, Higher Education,(H1), 5th December 2020,* கார்த்திகை **20,** சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு**–2051.]**

No.II(2)/HE/828/2020.—Under item (2) of Class II Other Members in Clause (b) Section 19 of the Annamalai University Act, 2013 the Governor of Tamil Nadu hereby nominates Dr. M. Srinivasan, Dean, Faculty of Marine Sciences, of Annamalai University Chidambaram as a member of the Syndicate of Annamalai University Chidambaram for a period of three years with effect from 30-01-2020 or till he ceases to be a Dean of Faculty of Annamalai University, whichever is earlier.

APOORVA,
*Principal Secretary to Government.*

HOME DEPARTMENT

**Appointment of Special Public Prosecutor (Human Rights) to the Courts of Sessions as Human Rights Courts in Dharmapuri District on tenure basis for certain period under the Protection of Human Rights Act.**

*[G.O. (D). No. 1431, Home (Cts.VIA) ,3rd December 2020,* கார்த்திகை **18,** சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு**–2051.]**

No.II(2)/HO/829/2020.—In exercise of the powers conferred by Section 31 of the protection of Human Rights Act 1993 (Central Act 10 of 1993) the Governor of Tamil Nadu hereby appoints Tmt. Aruljothi, W/o. C.Rajendran, 86/m, Gandhi Nagar, Dharmapuri Town, Dharmapuri District, as Special Public Prosecutor for the purpose of conducting cases registrered under the Human Rights Act, 1993 before the Courts of Sessions as Human Rights Courts in Dharmapuri District on tenure basis for a period of three years from the date of taking Charge of her appointment subject to observance of existing terms and conditions of appointment.

S.K. PRABAKAR,
*Additional Chief Secretary to Government.*

LABOUR AND EMPLOYMENT DEPARTMENT

**Renewal of Exemption granted to the Thanjavur West Sarvodaya Sangh, Thanjavur for the further period of one year from 11-10-2020 to 10-10-2021 under the Employees' State Insurance Act.**

No.II(2)/LE/830/2020.—In exercise of the powers conferred by Section 87 read with Section 91A of the Employees' State Insurance Act, 1948 (Central Act XXXIV of 1948). the Governor of Tamil Nadu hereby exernpts the Thanjavur West Sarvodaya Sangh, Thanjavur from the operation of the said .Act for the period of one year from 11-10-2020 to 10-10-2021.

(1) The above exemption is subject to the following conditions, namely:-

(a) The aforesaid Management wherein the employees are employed shall maintain a Register showing the names and designations of the exempted employees.

(b) Notwith standing the exemption, the employees shall continue to receive such benefits under the said Act to which they might have become entitled to on the basis of the contributions paid prior to the date from which exemption granted by this Notification operates.

(c) The contribution for the exempted period, if already paid shall not be refunded.

(2) The employer of the said management shall submit in respect of the period during which that Management was subject to the operation of the said Act (herein after referred to as "the said period") returns, in such form and containing such particulars as were due from it in respect of the said period under the Employees State Insurance (General) Regulations, 1950.

(3) Any Social Security Officer appointed by the Corporation under sub-section (1) of Section 45 of the said Act, or other official authorised in this behalf shall, for the purpose of,-

*(i)* verifying the particulars contained in any return submitted under sub-section (1) of Section 44 of the said Act for the said period; or

*(ii)* ascertaining whether registers and records were maintained as required by the Employees State Insurance (General) Regulations, 1950 for the said period; or

*(iii)* ascertaining whether the employees continue to be entitled to the benefits provided by the employer in cash and in kind, being benefits in consideration of which exemption is being granted under this Notification. or

*(iv)* ascertaining whether any of the provisions of the said Act had been complied with during the period when such provisions were in force in relation to the said workshops and stores be empowered to,-

(a) require the principal or immediate employer to furnish to him such information as he may consider necessary; or

(b) enter any management office or other premises occupied by such principal or immediate employer at any reasonable time and require any person found in charge thereof to produce to such Social Security Officer or other official and allow him to examine such documents, books and other documents relating to the employment of persons and payment of wages or to furnish to him such information as he may consider necessary: or

(c) examine the principal or immediate employer, his agent or servant, or any person found in such management office or other premises, or any person when the said Social Security Officer or other official has reasonable cause to believe to have been an employee; or

(d) make copies of or take extracts form any register, account book or other document maintained in such management office or other premises.

## Disputes between Workmen and Management referred to Industrial Tribunal for Adjudication

**தூசான் பவர் சிஸ்டம்ஸ் இந்தியா (பி) லிமிடெட், சென்னை**

*[அரசாணை (ப) எண் 623, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ1)த் துறை, 4 டிசம்பர் 2020, கார்த்திகை 19, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No. II(2)/LE/831/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தூசான் பவர் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், என்ற நிர்வாகத்திற்கும், தூசான் தொழிலாளர் சங்கம் என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை சென்னை, தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு சென்னை, தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ் இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிற் தீர்ப்பாயம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

தொழிற்சங்க உறுப்பினர்கள் மற்றும் பிற தொழிலாளர்களக்கும் நிர்வாகம் 2019ம் ஆண்டு வழங்கியுள்ள வருடாந்திர ஊதிய உயர்வு ஏற்றத்தாழ்வையும் பாரபட்சத்தையும் அதிகரித்துள்ளதாகவும், நியாயமான அடிப்படையில் வருடாந்திர உதிய உயர்வு வழங்க வேண்டுமென்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

## Disputes between Workmen and Management referred to Labour Courts for Adjudication

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை.**

*[அரசாணை (டி) எண். 606, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(பி2)த் துறை, 1 டிசம்பர் 2020, கார்த்திகை 16, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No. II(2)/LE/832/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை என்ற நிர்வாகத்திற்கும் அரசு போக்குவரத்து மதுரை தொழிலாளர் சங்கம் (CITU) மதுரை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற் தகராறை நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV 1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின்10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு மதுரை, தொழிலாளர் நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. P. முருகையா, ஓட்டுநருக்கு (பணி எண் DR 11583), வருடாந்திர ஊதிய உயர்வை 6 மாத காலத்திற்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், தற்காலிக வேலை நீக்கத்திலிருந்த 09–01–2017 முதல் 15–01–2017 வரையிலான நாட்களை சம்பளமில்லா விடுப்பாக கருதியும், நிர்வாகம் வழங்கிய 24–01–2018 நாளிட்ட உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண். 607, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(பி2)த் துறை, 1 டிசம்பர் 2020, கார்த்திகை 16, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/833/2020—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை என்ற நிர்வாகத்திற்கும் அரசு போக்குவரத்து மதுரை தொழிலாளர் சங்கம் (CITU) மதுரை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற் தகராறை நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV 1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற் தகராறு மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின்10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு மதுரை, தொழிலாளர் நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. A. குணசேகரன், ஓட்டுநருக்கு (பணி எண் DR 05977), வருடாந்திர ஊதிய உயர்வை 2 ஆண்டு காலத்திற்கு அதன் திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்தும், பேருந்தின் சேதாரத் தொகை ரூ.5,000/–இல் 5% தொகை ரூ. 250/–ஐ சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்தும், தற்காலிக வேலை நீக்கத்திலிருந்த 14–04–2018 முதல் 13–05–2018 வரையிலான நாட்களை சம்பளமில்லா விடுப்பாக கருதியும், நிர்வாகம் வழங்கிய 30–11–2018 நாளிட்ட உத்தரவினை இரத்து செய்ய வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், புதுக்கோட்டை மண்டலம்.**

*[அரசாணை (டி) எண். 608, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(பி2)த் துறை, 1 டிசம்பர் 2020, கார்த்திகை 16, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/834/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், புதுக்கோட்டை மண்டலம் என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் பொதுநல அமைப்புச் சங்கம், சிவகங்கை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–ஆம்** ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறு திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–ஆம்** ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. எம். சக்கரவர்த்தி விநாயக சரவணன், நடத்துநருக்கு **10–05–2019** நாளிட்ட நிர்வாக உத்தரவின் மூலம் பிடித்தம் செய்யப்பட்ட அபராதத் தொகை ரூ.**500/–**ஐ வட்டியுடன் வழங்க வேண்டும் மற்றும் வருகை இன்மை (Absent) பதிவு செய்யப்பட்ட நாட்களுக்குரிய சம்பளத்தை கணக்கிட்டு வட்டியுடன் வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா**?** ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**பாரத் டெக்ஸ்டைல்ஸ் & புரூபிங் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் .**

*[அரசாணை (ப) எண். 619, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(அ2)த் துறை, 4 டிசம்பர் 2020, கார்த்திகை 19, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/835/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, திருவள்ளூர் மாவட்டம், சூராவரிகண்டிகை கிராமத்தில் இயங்கி வரும் பாரத் டெக்ஸ்டைல்ஸ் & புரூபிங் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கும், புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணி (Bharat Textiles) கிளை 1 என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறில் கோரிக்கை எண்கள் **2** (பகுதி) **3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 14,** மற்றும் **15** ஆகியவற்றை சென்னை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–ஆம்** ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறு சென்னை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–ஆம்** ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

**கோரிக்கை எண்.2 (பகுதி) அடிப்படை சம்பளம்**

தொழிலாளர்களின் வேலைபளு, பணித்தன்மை, தற்போதைய விலைவாசி நிலவரம் உள்ளிட்ட காரணிகளை கருத்தில் கொண்டு தற்போதுள்ள அவரவர் அடிப்படை சம்பளத்தில் ரூ.**12,000/–** உயர்த்தி வழங்குமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா**?** ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.3 அகவிலைப்படி**

**1936–ம்** ஆண்டினை அடிப்படை ஆண்டாக கொண்டு ஏப்ரல்–**2017** அன்றுள்ள நுகர்வோர் குறியீட்டு எண் அடிப்படையில் மொத்த புள்ளிகளை கணக்கிட்டு புள்ளி ஒன்றுக்கு ரூ.**2/–** வீதம் வழங்கிடும்படி கோருவதாகவும் இந்த புள்ளிகளை ஈடு செய்வதும் புள்ளி ஒன்றுக்கு கோரும் தொகையில் மாற்றம் செய்துகொள்வதும் கூட்டுபேரத்தின் வாயிலாக முடிவு செய்ய கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா**?** ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.4 பணிமூப்புப்படி**

பணிமூப்புப்படியாக **5** ஆண்டு பணிக்கு ரூ. **500/–** மற்றும் அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ஆண்டு பணிக்கும் ரூ.**50/–** என்ற வகையில் கணக்கிட்டு சம்பளத்தில் உயர்த்தி வழங்குமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா**?** ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.5 வீட்டு வாடகைப்படி**

தொழிலாளர் அனைவருக்கும் வீட்டு வாடகைப்படியாக ரூ.**2500/–** வழங்குமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா**?** ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.6 போக்குவரத்துப்படி**

ஒவ்வொரு தொழிலாளிக்கும் தற்போது மாதா மாதம் வழங்கப்பட்டுவரும் போக்குவரத்துப்படி ரூ.**200/–**ஐ உயர்த்தி வழங்குமாறு கடந்த **6** ஆண்டுகளாக கோரிக்கை வைத்து வருவதாகவும், இந்த ஒப்பந்தத்திலாவது ரூ.**800/–**ஐ சேர்த்து ரூ.**1000/–** ஆக உயர்த்தி வழங்குமாறு கேட்டுள்ள தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா**?** ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.7 இரவு ஷிப்ட் படி**

இயற்கைக்கு மாறாக இரவு ஷிப்டில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஊக்கத்தொகையாக ஒரு ஷிப்டிற்கு ரூ.**50/–** வழங்குமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா**?** ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.8 உஷ்ணம் மற்றும் தூசி படி**

பாய்லர் பிளாண்டில் பணிபுரிபவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் உஷ்ணப்படி ரூ.**200/–** என்பதை ரூ.**300/–** ஆக உயர்த்தி வழங்குமாறும், ஜிக்கர் மற்றும் வேர் அவுஸ்ஸில் பணிபுரிபவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் உஷ்ணப்படி ரூ.**150/–** என்பதை ரூ.**250/–** ஆக உயர்த்தி வழங்குமாறும், வீவிங் துறையில் பணிபுரிபவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் தூசிபடி ரூ.**100/–** என்பதை ரூ.**200/–** என உயர்த்தி வழங்குமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா**?** ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.9 எண்ணெய் மற்றும் சோப்பு வகைகள்**

தொழிலாளர்கள் தூசியும் அழுக்கும் நிறைந்த சூழலில் பணிபுரிவதால் மாதந்தோறும் குளியல் சோப்பு (ஹமாம் 150 கிராம்) 2, சலவை சோப் (ரின் 150 கிராம்) 4 மற்றும் தேங்காய் எண்ணெய் (VVD) ஒரு கிலோ ஆகிய பொருட்கள் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.10 சீருடை**

ஒவ்வொரு தொழிலாளிக்கும் வருடந்தோறும் ஆண்டு துவக்கத்தில் மூன்று ஜோடி தரமான சீருடை மற்றும் தையல்படி ஒரு ஜோடிக்கு ரூ. 500/— அல்லது தைத்து தரும் பொறுப்பை நிர்வாகம் ஏற்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.11 காலணி, காலணி உறை மற்றும் மழைகோட்**

வேலை செய்வதற்கு தேவையான காலணி ஒரு ஆண்டிற்கு ஒரு ஜதை மற்றும் முழு காலணியுடன் தரமான காலுறைகள் ஒரு ஆண்டிற்கு 4 ஜோடி ஆகியவை வருடந்தோறும் மற்றும் மழைகோட் மூன்று ஆண்டிற்கு ஒன்றும் வழங்கக் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.14 வருகை ஊக்கப்படி**

தொழிலாளர்களின் முழு வருகையை ஊக்குவிக்கும் வகையில் வருகை ஊக்கப்படியாக மாதம் முழுவதும் வருகை தருபவர்களுக்கு ரூ. 1000/—மும், ஒருநாள் விடுப்புடன் வருகை தருபவர்களுக்கு ரூ. 500/—ம் மற்றும் EL, CL, விடுப்புகளை சேமித்து வைத்து தேவைப்படும்போது எடுக்க உரிமையையும் வழங்குமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.15 கல்விப்படி**

தற்காலத்தில் தொழிலாளர்களின் பிள்ளைகள் கல்விக்காக ஆகும் அதிகமான செலவை மனதிற்கொண்டு தொழிலாளர்களுக்கு ஆண்டிற்கு ஒருமுறை கல்விப்படியாக ரூ. 10,000/— "மே" மாதம் 15—ஆம் தேதிக்குள் வழங்குமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு மாநகர போக்குவரத்து கழகம், சென்னை லிமிடெட்.**

*[அரசாணை (ப) எண் 622, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ1)த் துறை, 04 டிசம்பர் 2020, கார்த்திகை 19, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு—2051.]*

No.II(2)/LE/836/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக மாநகர போக்குவரத்து கழகம், (சென்னை) லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கும் நேதாஜி டிரான்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ் யூனியன் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை, சென்னை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு சென்னை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. E. ராஜ்குமார் நடத்துநரின் (பணி எண்.சி57621) ஆண்டு ஊதிய உயர்வை இரண்டு வருட காலம் தொடர்விளைவுடன் தள்ளி வைத்து நிர்வாகம் வழங்கிய 31-10-2018 நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு தொழில் கூட்டுறவு ரப்பர்பால் கலந்த கயிறு பொருட்கள் சங்க இன்கோபோம் தொழிற்சாலை, தஞ்சாவூர்.**

*[அரசாணை (ப) எண். 624, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(அ2)த் துறை, 4 டிசம்பர் 2020, கார்த்திகை 19, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு—2051.]*

No.II(2)/LE/837/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ள தொழில் கூட்டுறவு ரப்பர்பால் கலந்த கயிறு பொருட்கள் சங்க இன்கோபாம் தொழிற்சாலை, என்ற நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு ரப்பர்பால் கலந்த கயிறு பொருட்கள் உற்பத்தி நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களால் ஏற்படுத்தப்பட்ட ஐந்து நபர் குழுவிற்கும் இடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை கும்பகோணம், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947—ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறு கும்பகோணம், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947—ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கும்பகோணம், தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

தஞ்சாவூர் மாவட்டம், பனையக்கோட்டை பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு ரப்பர்பால் கலந்த கயிறு பொருட்கள் உற்பத்தி நிறுவனத்தில் பணிபுரிந்த கீழ்க்கண்ட 13 தொழிலாளர்களுக்கு 01-05-2017 அன்று வேலை நிறுத்தி வைப்பு ஆணை வழங்கப்பட்டு (Lay-off) நாளது தேதி வரை பணி மறுக்கப்படுவதை சட்டத்திற்கு புறம்பான ஆட்குறைப்பாகக் கருதி பின்சம்பளத்துடன் மீண்டும் பணி வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

| வ. எண். | பெயர் | பதவி | பணியில் சேர்ந்த தேதி | ஓய்வு பெறும் தேதி |
|---|---|---|---|---|
| 1. | V. காந்தி | M/O | 25–04–1990 | 16–01–2024 |
| 2. | S. பாண்டியன் | SSW | 01–04–1996 | 19–05–2026 |
| 3. | R. ராமன் | SSW | 22–11–1990 | 15–05–2024 |
| 4. | U. செந்தில் | SSW | 01–04–1998 | 04–05–2031 |
| 5. | M. காத்தையன் | SSW | 22–11–1990 | 09–01–2023 |
| 6. | K. சேரலாதன் | SSW | 24–11–1990 | 27–07–2022 |
| 7. | S. வீரமணி | SSW | 01–09–1993 | 18–05–2023 |
| 8. | S. சேகர் | SSW | 01–04–1995 | 21–06–2021 |
| 9. | M.M. பாஸ்கரன் | SSW | 01–09–1993 | 30–03–2020 |
| 10. | V. தெய்வநாயகம் | M/O | 19–04–1990 | 19–06–2024 |
| 11. | S. சுகுமார் | M/O | 19–04–1990 | 13–03–2027 |
| 12. | S. இராமலிங்கம் | SSW | 23–11–1990 | 24–03–2026 |
| 13. | N. கண்ணுச்சாமி | SSW | 22–11–1990 | 17–06–2024 |

**முகமது நசிமுத்தின்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU